அதற்குறிய ஈடடுத் தொகையாக 5,000 ரூபாய்க்கு மேல் கேட்கின்ற காரணத்தினாலும், அரசு ஆணை ஏற்கனவே ஒரு வீட்டு மனைக்கு 5,000 க்கு மேல் கொடுக்கக் கூடாது என்று இருக்கின்ற காரணத்தினாலும் அந்தப் பகுதியிலே இந்தத் திட்டத்தை செயல்படுத்த இயலவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; வினா எண். 39, திரு. மு. வெங்கடராம ரெட்டி, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

39—

*9964 —திரு. மு. வெங்கடராம ரெட்டி :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தேன்கனிக்கோட்டை வட்டம், அஞ்செட்டியில் நட மாடும் கால்நடை மருந்தகம் ஒன்றை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. மு. வெங்கடராமரெட்டி : பேரவைத் தலைவர் அவர் களே, அமைச்சர் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். என்னு னுடைய பகுதி தேன்கனிகோட்டையிலிருந்து அஞ்செட்டி 25 மைல் ஆகும். அஞ்செட்டியிலிருந்து நாட்ராம்பாளையம் ஒகேனக்கல் வரையும் ஏறக்குறைய 60 மைல் இருக்கிறது, 60 மைலிலேயும் There is no veterinary centre at any place. அந்த 60 மைலும் காட்டுப்பிரதேசம். ஆடு மாடுகளை ஓட்டிப்போக முடியாது. அதனால் ஒரு மொபைல் வெட்ரினரி சென்ட்டர் அந்தந்த ஏரியா வில் போனால் நன்றாகஇருக்கும்.அதுமட்டுமல்லாமல் அந்த பக்கத் தில் இருக்கின்ற இடம் எல்லாம் கர்நாடக மாநிலம் —காவேரி பார்டர். அங்கே ஒரு வெட்ரினரி சென்ட்டர் இல்லை என்பதால் அங்கே இருப்பவர்கள் ரொம்ப பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதற் காக அரசு உடனடியாக இப்பொழுது இல்லை என்றாலும் இன் னும் 3 மாதங்களுக்குள்ளாவது இந்த வெட்ரினரி மொபைல் சென்ட்டரை ஏற்படுத்த வேண்டும். It is a forest area. The forest area is infested with cheetahs and elephants. I request the Honourable Minister to establishs at least in the next year, a veterinary mobile centre at Anjatti vilalge.

1992 செப்டம்பர் 22]

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேன்கனிக்கோட்டை தாலுக்காவில் அஞ்செட்டியில் ஒரு கால்நடை மருந்தகம் தற்போது இயங்கி வருகிறது. தேன்கனிக்கோட்டையில் அஞ்செட்டியில் நடமாடும் கால்நடை மருந்தகம் அமைக்கும் பிரேரணை பெறப்படின் தேவையின் அடிப்படையிலும், நிதி நிலையின் அடிப்படையிலும் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 40, டாக்டர் எம்.கருப்புசாமி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

40 —

குன்னூர் தொகுதியில் தொழிற்பேட்டை அமைத்தல்.

*9570 —டாக்டர் எம். கருப்புசாமி :

மாண்புமிகு ஊரகத்தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குன்னூர் தொகுதியில் ஒரு தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர்மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) குன்னூரில் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் நெல் விளைவதில்லை. ஆகவே அங்கே உள்ள மக்களுடைய வாழ்வில் தினசரி அரிசி பற்றாக் குறை இருக்கிறது. சற்று அரிசியைக் கூட்டிக் கொடுங்கள் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களைக் கேட்டவுடன் ஒரு மாதத்திற்குள்ளாக ஒவ்வொரு ரேஷன் கார்டுக்கும் 4 கிலோ அரிசியை அதிகமாகக் கொடுத்து மக்களுடைய பசியைத் தீர்த்த இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியைக் கூறிக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இவ்வாறாக நீலகிரி மாவட்ட மக்களின் மேல் அன்பும் பாசமும்